ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1688/29 - 2011 ජනවාරි 14 වැනි සිකුරාදා - 2011.01.14

*1688/29 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

மேல் மாகாண மாகாண சபையின் 1998 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க விளையாட்டு (திருத்த) நியதிச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட மேல் மாகாண விளையாட்டு நியதிச்சட்டத்தின் 4(9) (ஆ) பிரிவின் கீழ் மேல் மாகாண மாகாண சபையின் கூட்டுறவு, வர்த்தக, உணவு, நீர் வழங்கல், மின்சாரம், விளையாட்டு, இளைஞர், மகளிர், கலை கலாசார அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2002 மே மாதம் 15ஆம் திகதிய 1236/13 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இல. 8(அ), (ஆ) கட்டளை பின்வருமாறு திருத்தப்படுகின்றது. இக்கட்டளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அமுலாக்கம் பெறல் வேண்டும்.

ஹேவா மாதரகே உபாலி கொடிகார,
போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், விளையாட்டு,
இளைஞர் விவகார, கலை, கலாசார மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர்.
மேல் மாகாண மாகாண சபை.

கொழும்பு,
2011, சனவரி 14.

**கட்டளை**

08. (அ) புதிதாக விளையாட்டுக் கழகங்களைப் பதிவு செய்வதற்காக வருடத்தின் எத்தினத்திலும் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பதிவை வருடாந்தம் புதுப்பிக்க அவ்வருடத்தின் பதிவு முடிவுத் திகதியிலிருந்து லீத் மாதத்துக்குள் பின்வரும் ஆவணங்களுடன் விண்ணப்பித்தல் வேண்டும்:-

(i) அடுத்த வருடத்துக்கு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்ட பொதுக்கூட்ட அறிக்கைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்;

(ii) குறிப்பிட்ட வருடத்தின் வரவுசெலவு தொடர்பான கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் 4;

(iii) அடுத்த வருடத்துக்கு தெரிவான உத்தியோகத்தர்களின் பெயர், முகவரிகள்;

(iv) பிரிவு விளையாட்டு அதிகாரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டி, பயிற்சி முகாம், கருத்தரங்குகளில் கலந்துகொண்ட விபரங்கள்;

(v) பெயர், முகவரிகளுடன் உறுப்பினர்களின் அட்டவணை.

01-697

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.